**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXV of BNSS)**
**----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 15.10.2024**

**Case No : DVC 6/ 2021**

**Deposition of Witness : P.W. 1**

| | |
|---|---|
| **Name: சாந்தி** | **Caste:** |
| **Father / Husband Name: கவிராஜ் எஸ் ராஜ்குமார்** | **Calling:** |
| **Village: சாத்தான்குளம்** | **Religion:** |
| **Taluk: சாத்தான்குளம்** | **Age: 54** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 15.10.2024**

முதல் விசாரணை:

1. நான் தற்போது சாத்தான்குளம் வடக்கு ரதவீதியில் குடியிருந்து வருகிறேன். நான் இந்த வழக்கை என்னுடைய கணவர் என்னுடைய நகை மற்றும் பணத்தை எடுத்து சென்றதால் அவற்றை திருப்பி கொடுக்க கேட்டபோது அவர் என்னை கொலை செய்து விடுவதாக மிரட்டியதால் தாக்கல் செய்துள்ளேன். மேலும், எனக்கு வாழ்க்கை பொருளுதவி கேட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2. என்னிடம் காண்பிக்கப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். அதை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக் கொள்கிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்னுடைய ஆதார் அட்டையின் நகல் ஆகும். **(அது ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 2000 ம் ஆண்டு நானும் என்னுடைய சகோதரிகளும் செய்து கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் சான்றிட்ட நகல் ஆகும். **(அது ம.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்னுடைய கணவரின் ஸ்மார்ட் கார்ட் நகல் ஆகும். **(அது ம.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்னுடைய கணவரின் இரண்டாவது மனைவியான முத்துமாரி என்பவரின் பெயரில் உள்ள ஸ்மார்ட் கார்ட் நகல் ஆகும். **(அது ம.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** (மேற்கண்ட ஆவண்களை குறியீடு செய்த பிறகு எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர், மேற்படி ஆவணங்களின் நகல் அவருக்கு வழங்கப்படவில்லை என்பதால் ஆட்சபேனையுடன் குறியீடு செய்ய

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2024.10.15 17:57:57 +0530

வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆனால், அந்த ஆவணங்கள் அசல் மனு தாக்கல் செய்யும் போதே இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், ஆவணத்தின் செல்லும் தன்மை குறித்து ஆட்சபேனை செய்யப்படவில்லை என்பதாலும் எதிர் மனுதாரர் தரப்பு ஆட்சபேனை நிராகரிக்கப்படுகிறது.)

**(மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2024.10.15 17:58:02 +0530

Judicial Magistrate(FAC),
Sathankulam.